**செ. கு. எண்: 014** **நாள்: 21.01.2018**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 21.1.2018</u>

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், பாலூர் கிராமம், மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் உதவியாளராகப் பணிபுரிந்து வந்த திரு. முருகேசன் என்பவரின் மகன் திரு. வெங்கடேசன் என்பவர் மின் கம்பத்தில் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் தெற்கு வட்டம், சௌரிபாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆதி என்பவரின் மகன் செல்வன் ஏ. நிமிலன் என்பவர் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் வட்டம், மேலூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சாமிதுரை என்பவரின் மனைவி திருமதி. சரஸ்வதி மற்றும் அதே கிராமத்தைச் சேர்ந்த திரு. கணேசன் என்பவரின் மனைவி திருமதி. தங்கம் ஆகியோர் மரம் விழுந்து அறுந்த மின் கம்பியை மிதித்ததில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்கள் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி வட்டம், நாரணம்மாள்புரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. பாலகிருஷ்ணன் என்பவர் மின்கம்பத்தில் வேலை பார்க்கும் போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், முடுக்கன்துறை கிராமத்தைச் சேர்ந்த திரு. செங்கோடன் மகன் திரு. வீரமணி என்பவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், சேலம் தெற்கு வட்டம், அமாணி கொண்டலாம்பட்டி கிராமத்தில், மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் வயர்மேனாக பணியாற்றி வந்த திரு. முத்துசாமி என்பவரின் மகன் திரு. எம். கோவிந்தராஜன் என்பவர் மின் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வடக்கு வட்டம், வேலம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சுரேஷ் என்பவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு வட்டம், ஊனை வாணியம்பாடி மதுரா ஏரிப்புதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. ராஜேந்திரன் மற்றும் திரு. ஜெயக்குமார் ஆகியோர் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்கள் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், ஊர்மெச்சிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. வீரன் என்பவரின் மகன் திரு. மகாலிங்கம் என்பவர் மின் கம்பத்தில் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த **11** நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்த **11** நபர்களின் குடும்பத்திற்கு தலா மூன்று லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

**நாள்: 21.01.2018**